மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்

முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆண்டு விசுவாவசு வருடம், ஆவணி மாதம் 17 ம் நாள்

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02-ம் நாள் செவ்வாய்கிழமை

இடைக்கால மனு எண்.15/2025

in

அசல் வழக்கு எண். 218/2021

1. M. சின்னசாமி
2. வசந்தாமணி
3. மேனகா
4. கீதாமணி
5. அய்யாமணி **...மனுதாரர்கள்/வாதிகள்**

//எதிர்//

1. V.A. சதாசிவம்
2. M. கவிதா
3. K. முத்துசாமி
4. சுந்தரமூர்த்தி
5. S. ரவிக்குமார்
6. S. சின்னதுரை **... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. பொன்னுச்சாமி, அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.சித்ரா, அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில்

ஒருதலைப்பட்சமாகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

உத்தரவு

அசல் வழக்கில் திருத்தம் மேற்கொள்ள வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 16 & 17 ன் பிரிவு 151 ன் கீழ் இம்மனு மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:

1.1). 02.06.2016 ம் தேதியில் வாதிக்கு பிரதிவாதி எழுதி கொடுத்த கிரயப் பத்திரத்தின் படி வாதி 1ம் அயிட்ட சொத்தில் முழுமையான உரிமையாளராக சுவாதினத்தில் உள்ளார். மேற்படி வழக்கு 1ம் ஆயிட்ட சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி 22.12.2023 அன்று நீதிமன்ற ஆணையரின் வருகைக்கு முன்பாக வழக்கு 1ம் அயிட்ட சொத்துடன் அவரது சொத்தையும் சேர்த்து சட்ட விரோதமாக 1, 2 பிரதிவாதிகள் வேலி அமைத்துள்ளனர். 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு வழக்கு 1ம் அயிட்ட சொத்தில் எவ்வித உரிமையோ அனுபவமோ இல்லை. நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் மேற்படி வேலியை குறித்து குறிப்பிட்டுள்ளார். 1, 2 எதிர்மனுதாரர்கள் சட்டவிரோதமாக ஏற்படுத்தப்பட்ட அவர்களது நிலத்துடன் சேர்த்து போடப்பட்ட சட்டவிரோதமான வேலியை அகற்ற கடமைப்பட்டவர்கள்.

1.2). எனவே மேற்படி வேலியை இந்நீதிமன்றத்தின் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் மூலமாகத்தான் மேற்படி வேலியை அகற்ற முடியும். மேற்படி மனு அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும்.

எனவே மேற்படி திருத்தமானது மிகவும் அவசியமான ஒன்றாகும். மேற்படி திருத்தத்தை அனுமதிப்பதால் அசல் வழக்கின் தன்மை எதுவும் மாறாது. எனவே மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

2). 1, 2 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :

2.1). மேற்படி மனு பொய்யானது, மோசடியானது. மேற்படி மனுவானது சட்டப்படியும், நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் இந்த மனுவினை, 1 , 2 எதிர் மனுதாரர்கள் 22.12.2023 ந் தேதி 1 வது அயிட்ட சொத்தில் கம்பி வேலி அமைத்ததாகவும், அதனை நீதிமன்ற ஆணையரும் தனது அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளதாகவும் அதனை செயலுறுத்துக்கட்டளை மூலம் அகற்ற வேண்டும். ஆகவே அசல் வழக்கினை திருத்தம் செய்ய வேண்டும் என கூறி உள்ளனர். ஏற்கனவே 1, 2 எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபணை குறிப்பு தாக்கல் செய்துள்ளனர். உண்மையில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தினை அளந்து வரைபடம் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தின் பௌதீக அமைப்பினை மட்டும் தான் பார்வையிட்டு அறிக்கை வரைபடம் தாக்கல் செய்துள்ளார்.

2.2). நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் 2 வது பக்கத்தில் மேற்படி தாவா தடத்தினை மஞ்சள் நிறத்தில் காண்பித்துள்ளேன். மேற்படி தடம் மட்டும் சமீபத்தில் நிறவி இருப்பதாக தென்பட்டது. மேலும் இந்த தடத்திற்கு மேற்கில் கம்பி வேலி போடப்பட்டும், மேலும் அதனுள் எதிர் மனுதாரர் பூமி உள்ளதாகவும் மனுதாரர் வழக்கறிஞர் தெரிவித்தார். மேற்படி கம்பிவேலியானது இன்றுதான் எதிர்மனுதாரர்கள் போடப்பட்டுள்ளனர் என மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையரிடம் தெரிவித்தார் என அறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே நீதிமன்ற ஆணையர் தான் பௌதீக அமைப்பில் பார்த்ததை அறிக்கையில் குறிப்பிடவில்லை. மனுதாரர் வழக்கறிஞர் தெரிவித்ததை அறிக்கையாக

சமர்ப்பித்துள்ளார்.

2.3). அந்த நீதிமன்ற அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளதினால், 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கினை திருத்தம் செய்ய கோரி இருப்பது ஏற்றுகொள்ளத்தக்கதல்ல. மேலும் தாவாவில் சொல்லப்பட்டுள்ள தடம் என்பதே 1, 2 எதிர்மனுதாரர்கள் மற்றும் 7 நபர்களுக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலம் ஆகும். எனவே 1, 2 எதிர்மனுதாரர்கள் மற்றும் 7 நபர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் உள்ள கம்பி வேலியினை அகற்ற மனுதாரர்கள் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோர எவ்வித உரிமையும் இல்லை. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

3. இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. எதிர்மனுதார்கள் தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. அசல் வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது 1ம் அயிட்ட சொத்திற்கு 1ம் வாதிதான் முழுமையான உரிமையாளர் என விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், 2ம் அயிட்ட சொத்தில் வாதிகளின் 2ம் அயிட்ட சொத்தான வண்டிப் பாதையில் வாதிகளின் உரிமையை விளம்புகை செய்யக்கோரியும், 2ம் அயிட்ட சொத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், 05.09.2007, 19.05.2015 தேதியிட்ட கிரையப்பத்திரம் செல்லாது என விளம்புகை செய்யக்கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.1). அசல் வழக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. அசல் வழக்கில் இடைநிலை மனு எண்.3/2021ல் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். அதில் "மேற்படி எதிர்மனுதாரர் பூமியை தாண்டியதும் தென்பட்ட தடமானது நிறவி சுத்தம் செய்யப்படாமல் மாமூல் தடமாக காணப்பட்டது. மேற்படி தடத்தை சிவப்பு காண்பித்துள்ளேன். மேற்படி தடத்திற்கு மேற்கிலும் எதிர்மனுதாரரின் பூமிக்கு வடக்கிலும் ஒரு பூமி காணப்பட்டது" என குறிப்பிட்டுள்ளார்.

5.2). மனுதாரர்கள் தரப்பில் 1, 2 எதிர்மனுதாரர்கள் 22.12.2023 நீதிமன்ற ஆணையரின் பதவிக்கு முன்பாக எதிர்மனுதாரர்கள் 1ம் அயிட்ட சொத்தை அவர்களது சொத்துடன் சேர்த்து சட்ட விரோதமாக வேலி அமைத்ததாக சொல்லப்பட்டுள்ளது. எனவே அது சம்பந்தமாக வழக்குகள் திருத்தம் செய்து மேற்படி வேலியை நீக்கம் செய்யக்கோரி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கை திருத்தம் செய்ய வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரையில் சொன்னவாறு ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

5.3). அசல் வழக்கு 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்கள் குறித்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளதாலும் மனுதாரர்கள் தரப்பில் 1, 2 எதிர்மனுதாரர்கள் 1ம் அயிட்ட சொத்தை அவர்களது சொத்துடன் சேர்த்து வேலி அமைத்துள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அது சம்பந்தமாக தீர்வு காண வேண்டியது அவசியம் ஆகும். மனுவில் கூறியுள்ள திருத்தமானது அசல் வழக்கின் பட்டியல் விசாரணைக்கு முன்பாக உள்ள திருத்தமாகும். மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டவாறு அட்டவணை 1ம் அயிட்டம் பிரதிவாதி சொத்துடன் சேர்த்து வேலி அமைக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து அசல் வழக்கு விசாரணையின் போது தீர்வு காணப்படும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. முடிவாக நீதியின் நலன் கருதி மேற்படி மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது செலவுத்தொகை இல்லை.

முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சூலூர்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- - இல்லை

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-

ஆவண. எண்.	தேதி	ஆவணம்	ஆவணத்தின் தன்மை
ம.சா.ஆ.1	---	IA.No.3/2021 ல் உள்ள ஆணையர் அறிக்கை	அசல்
ம.சா.ஆ.2	---	புகைப்படங்கள் 8 எண்ணிக்கை	புகைப்பட நகல்

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-இல்லை

Sd/M.Santhosham

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சூலூர்.

Draft/Fair order
IA.No.15/2025 in
OS.No.218/2021
Dated:.02.09.2025
DMC, Sulur.